
உலக அழிவிலிருந்து
தப்பித்துக்கொள்வது எப்படி?
How to Escape from the Destruction of the World ?
Pastor. A. Samuel

# இந்த உலக அழிவிலிருந்து தப்பித்துக்கொள்வது எப்படி?

போதகர். A. சாமுவேல்

# பொருளடக்கம்


| உட்தலைப்புகள் | பக்கம் |
|---|---|
| ஆதியில் இருந்த உலகம் | 1 |
| ஏதேனின் காலம் | 2 |
| நோவாவின் காலம் | 3 |
| சோதோமின் காலம் | 5 |
| இஸ்ரவேலரின் காலம் | 5 |
| இயேசுகிறிஸ்துவின் காலம் | 7 |
| மீட்பின் திட்டம் | 7 |
| ஏழு சபைக்காலங்களும், அதன் தூதர்களும் | 8 |
| கடைசிகாலம் | 8 |
| மூன்று உலகமகா யுத்தங்கள் | 8 |
| உபத்திரவக்காலம் | 13 |
| புதிய வானம், புதிய பூமி | 14 |

# முன்னுரை

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக. கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! தேவனுடைய பெரிதான கிருபையினால் கல்வாரி கூடாரத்தின் ஊழியமானது ஏழாம் சபையின் தூதன் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட, வேதத்தில் மறைந்திருக்கின்ற இரகசியங்களையும் மேலான வெளிப்பாடுகளையும் கொண்டு இயேசுகிறிஸ்துவுக்கென்று ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் நடைபெற்று வருகிறது.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இந்த ஸ்தலத்தில் உண்மையான சத்தியத்தைத் தேவஆவியைக் கொண்டு பகுத்துப் போதிப்பதுடன், இந்த மேன்மையான செய்தியை உலகத்தின் பலபாகங்களில் இருக்கும் மற்றவர்களும் கேட்டு வருகைக்கு ஆயத்தமாகி, எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெற வேண்டுமென்ற ஆத்தும பாரத்துடன் இணையதளம் மூலமாகவும் கொடுக்கப்படுகிறது. அநேக தேவனுடைய பிள்ளைகள் முழுமையான சத்தியத்தைக் கேட்டுப் பயனடைகின்றனர்.

இந்த உலக அழிவிலிருந்து தப்பித்துக்கொள்வது எப்படி? என்ற இக்கைப்பிரதியை வாசிக்கின்ற நீங்களும் முழுமையான சத்தியத்தை உணர்ந்து கொண்டு வரும் அழிவிலிருந்து தப்பித்துக்கொள்வீர்கள் என்று விசுவாசிக்கிறேன். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

...ஆமென்...

கிறிஸ்துவின் பணியில்,
போதகர். A. **சாமுவேல்**,
கல்வாரி கூடாரம்,
வளசரவாக்கம்,
சென்னை - 600087.

## இந்த உலக அழிவிலிருந்து தப்பித்துக்கொள்வது எப்படி?

நாம் வாழும் இவ்வுலகம் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். இவ்வுலகம் அழியும்போது நாமும் அதனுடன் அழியாமல் தப்பித்துக்கொள்வது எப்படி என்பதை வேத வசனத்தைக்கொண்டு காணலாம்.

**2 பேதுரு 3:10. கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.**

கர்த்தருடைய நாள் இரவில் திருடன் வருவது போல எதிர்பாராத விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போகும். மடமடவென்றால் அதிக சத்தமாக விலகிப்போகும். பூதங்கள் என்பது பூமியிலுள்ள எல்லாவிதமான நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு முதலியவற்றைக் குறிக்கிறது. அவைகளெல்லாம் வெந்து உருகிப்போகும். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோகும். மனிதனின் கண்டுபிடிப்புகள், சாதனைகள், முயற்சிகள் எல்லாமே முற்றிலுமாக அழிந்துபோகும் என்று தேவனுடைய வார்த்தை நமக்குச் சொல்லுகிறது. வரப்போகும் இந்த அழிவிலிருந்து நாம் எப்படி தப்பித்துக்கொள்ள முடியும்? தப்பித்துக்கொள்ள வழி இருக்கிறதா? என்றால் தப்பித்துக்கொள்ள வழி இருக்கிறது. அதைத்தான் நாம் இப்பொழுது பார்க்கப் போகிறோம்.

**ஆதியில் இருந்த உலகம் :** கர்த்தர் இந்தப் பூமியை அற்புத விதமாக சிருஷ்டித்தார். அதை மிகவும் அழகாகவும், பரிபூரணமாகவும் உண்டாக்கினார். அப்பொழுது பூமியிலே பாலைவனங்களோ, வெப்பம் மற்றும் குளிர் பிரதேசங்களோ இல்லை. எல்லா இடத்திலும் மிதமான சீதோஷ்ண நிலையே இருந்தது. தேவன் எத்தனையோ கிரகங்களை உண்டாக்கினாலும், இந்தப் பூமியில் தான் மனுஷன், நிலவாழ் ஜீவராசிகள், நீர்வாழ் ஜீவராசிகள் மற்றும் தாவரங்கள் வாழ்வதற்கான ஏற்ற சூழ்நிலையை உண்டாக்கினார். இது தேவனுடைய தெரிந்து கொள்ளுதலாக இருக்கிறது. தேவன் இந்தப் பூமியின் மேல் அன்புகூர்ந்து தம்முடைய பிள்ளைகள் வாசம் பண்ண பூமியை ஏற்ற ஸ்தலமாக மாற்ற

சித்தம் கொண்டார். எனவே அவர் சமுத்திரம், ஆறுகள், நீரூற்றுகளை உண்டாக்கும்போது தண்ணீர் சுத்தமாகவும் தெளிவாகவும் இருந்தது. அதிலுள்ள நீர்வாழ் ஜீவராசிகள் நீந்தும்போது தெளிவாகத் தெரியும். தண்ணீரானது ஆரோக்கியமாகவும், கனிமச்சத்து நிறைந்ததாகவும், குடிப்பதற்கு நன்னீராகவும் இருந்தது. தேவன் மிருகங்களையும், பறவைகளையும் நீர்வாழ் ஜந்துக்களையும் உண்டாக்கினார். எல்லாமே அருமையாகவும் இசைவாகவும் இருந்தது.

தேவன் உண்டாக்கியது எல்லாமே நன்றாக இருந்தது. அதில் எந்தத் தீமையும், பயமும், எந்த நோய் கிருமிகளும் கிடையாது. சுத்தமாக, அழகாக, சகலமும் ஒழுங்குகிரமமாக இருந்தது. இவ்விதமான உலகத்தைத்தான் ஆதியிலே தேவன் சிருஷ்டித்தார் என்று ஆதியாகமம் 1 ஆம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம்.

**ஏதேனின் காலம் :** தேவன் மனுஷனைத் தம்முடைய சாயலாக ஆணும் பெண்ணுமாக உண்டாக்கி, எல்லாவற்றையும் நீங்கள் ஆண்டுகொள்ளுங்கள் என்று அவர்களை ஆசீர்வதித்தார். ஏதேனின் காலத்தில் ஆதாமும் ஏவாளும் தேவனோடு ஐக்கியப்பட்டார்கள். அவர்கள் உரைக்கப்பட்ட வார்த்தையினாலே இயற்கையை ஆளுகை செய்தார்கள். காற்றைப் பார்த்து "வீசாதே " என்றால் அது வீசாது. மரத்தைப் பார்த்து "அங்கே போ" என்றால் அது போகும். ஒரு மலையைப் பார்த்து, "நீ அங்கே போ" என்றால் அது போகும். ஒரு மிருகத்தைப் பார்த்து "வா" என்றால் அது வரும். இவ்விதமாய் தேவன் அவர்களுக்கு இயற்கையின்மேல் ஆளுகை கொடுத்தார். இதனுடன் தேவன் அவர்களுக்கு ஒரு பிரமாணத்தையும் (கட்டளை) கொடுத்தார். அவர்கள் அந்தப் பிரமாணத்தை மீறும் போது மரணம் வந்தது.

கர்த்தர் ஏதேனில் ஜீவவிருட்சத்தையும், நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தையும் வைக்கும்போது அவர்கள் தவறான விருட்சத்தைத் தெரிந்து கொண்டார்கள். "நீ நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று கர்த்தர் சொல்லியிருந்தார். (ஆதியாகமம் 2 : 17) ஜீவவிருட்சமும் மரணவிருட்சமும் இருக்கிறது. ஜீவவிருட்சம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

மரணவிருட்சம் சாத்தான். ஆதாம், ஏவாளுக்கு முன்பாக இரண்டு வழிகளையும் வைத்து, நீங்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து நடக்கலாம் அல்லது உங்களின் சொந்த அறிவின்படி நடக்கலாம். உங்கள் சொந்த அறிவின்படி நடந்தால் "சாகவே சாவாய்" என்று சொல்லியிருந்தார். மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரணவழிகள் என்று நீதிமொழிகள் 16:25-ல் வாசிக்கிறோம்.

சர்ப்பமானது ஏவாளை வஞ்சித்ததினால் அவள் விலக்கப்பட்ட கனியாகிய அறிவின் விருட்சத்தில் பங்கு பெற்றாள். அவள் அந்தக் கனியைப் புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள். ஆதாம் தேவனுடைய வார்த்தையை மீறினான். ஏவாள் அந்தக் கனியைப் புசித்து, சர்ப்பத்தோடு ஐக்கியப்பட்டு, சர்ப்பத்தின் வித்தாகிய காயீனைப் பெற்றாள். அவர்கள் தேவனுடைய வார்த்தையை மீறியதால் பாவிகளாக மாறினார்கள்.

எனவே, கர்த்தர் நீங்கள் தேவனுடைய வார்த்தையை மீறி, விசுவாசித்து ஜீவிப்பதற்கு பதிலாக, உங்களுடைய சொந்த அறிவின்படி ஜீவித்ததால் நீங்கள் இனிமேல் ஏதேனில் வாழ முடியாது என்று ஏதேனை விட்டுத் துரத்தினார். ஏதேன் என்றால் இன்பம். வார்த்தையின்படி ஜீவித்தால் மட்டுமே ஏதேனில் இருக்கமுடியும்.

**ஆதியாகமம் 3:19. நீ பூமியிலிருந்து எடுக்கப் பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்.**

**நோவாவின் காலம் :** வேதத்தில் நாம் பார்க்கும்போது இரண்டு சந்ததி ஏற்படுகிறது. ஒன்று காயீன் சந்ததி. மற்றொன்று ஆதாமின் சந்ததி. இவை இரண்டும் தனித்தனியாக இருந்தது. முதலில் காயீன் பயிர்செய்து ஜீவித்தான். கனிசெடிகள், தாவரங்களை உற்பத்தி செய்து ஜீவித்தான். அதன்பின்பு பூமியைத் தோண்டி இரும்பு, செம்பு, பித்தளை போன்ற மூலப்பொருட்களைக் கொண்டு வீடுகட்டுதல், ஆயுதங்கள்செய்தல், இசைக் கருவிகளைச் செய்தல் முதலிய தொழில்களைச் செய்தார்கள். ஆதாமின் மூலம் சேத் சந்ததியார் வரும்பொழுது தேவன் அவர்களுக்கு வார்த்தையின்படி ஜீவிக்கவேண்டும் என்ற பிரமாணத்தைக் கொடுத்தார். வார்த்தையின்படி ஜீவித்தால் அழிவு இல்லை என்பதுதான் அந்தப் பிரமாணம்.

காயீன் சந்ததியார் மனுஷகுமாரர்கள், மனுஷ குமாரத்திகள் என்றும், ஆதாமின் சந்ததியார் தேவகுமாரர், தேவகுமாரத்திகள் என்றும் அழைக்கப்பட்டார்கள். பின்பு, தேவகுமாரர் மனுஷகுமாரத்திகள் அழகாக இருக்கிறார்களென்று அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்து கொள்ளும்போது, இரண்டு வித்தும் சேர்ந்து கலப்படமான சந்ததி வந்தது.

ஆதாமுக்குப் பத்தாம் தலைமுறையான நோவா வரும்போது எல்லாமே கலப்பு மார்க்கமாக மாறிவிட்டது. தேவனையும் ஆராதிப்பது, பாவத்தையும் செய்வது என்று மனம்போல ஜீவித்தார்கள். இவ்விதமான சூழ்நிலையில்தான் நோவா கர்த்தருக்குப் பிரியமாக ஜீவித்தான். அவன் தேவனுடைய வார்த்தையின்படி நீதிமானாய், உத்தமனாய் இருந்தபடியால் கர்த்தர் நோவாவோடு உடன்படிக்கைப் பண்ணினார். இந்த உலகம் பாவத்தினால் நிறைந்திருக்கிறது. அதை அழிக்கப்போகிறேன். இரவும் பகலும் நாற்பது நாட்கள் மழை பெய்யும். நீயும் உன் குடும்பத்தாரும், விலங்குகளும், பறவைகளும் ஜோடுஜோடாக பேழைக்குள் பிரவேசிக்க வேண்டுமென்று கர்த்தர் சொன்னார்.

**ஆதியாகமம் 6 : 11, 12. பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது. மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள்.**

அவர்கள் கண்களின் இச்சையிலும், மாம்சத்தின் இச்சையிலும் விழுந்து கிடந்தார்கள். கர்த்தர் அந்த உலகத்தைத் தப்ப விடவில்லை.

**2 பேதுரு 2 : 5. பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணினார்.**

நோவா காலத்தில் இருந்த உலகம்தான் பூர்வஉலகம். நீதியைப் பிரசங்கித்த நோவாவையும் அவன் குடும்பத்தையும் காப்பாற்றி, இச்சையின்படி வாழ்ந்தவர்களை ஜலப்பிரளயத்தினால் கர்த்தர் கவிழ்த்துப் போட்டார்.

**சோதோமின் காலம் :** நோவாவின் காலத்தைப் போலவே சோதோம் கொமோராவின் மக்கள் பொல்லாதவர்களும், கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளுமாய் இருந்தார்கள்.

**2 பேதுரு 2 : 6. சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப் போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்தார்.**

சோதோம் கொமோரா திருஷ்டாந்தமாக, ஒரு அடையாளமாக இருக்கிறது. அந்தப் பட்டணத்து மக்கள் பொல்லாதவர்களாகவும், பாவிகளாகவும், இச்சைரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்களாகவும், சுபாவத்துக்கு விரோதமான அநுபோகங்களை உடைய அசுத்தமான பாவங்களை உடையவர்களாகவும் (LGBT) இருந்ததினால் கர்த்தர் அந்தப் பட்டணத்தை அக்கினிக்கு இரையாக்கிச் சாம்பலாக மாற்றினார். ஆனால் நீதிமானாகிய லோத்தை அவர் காப்பாற்றினார். இந்தக் கடைசி காலத்திலும் அவ்விதமாகவே சம்பவிக்கும்.

**இஸ்ரவேலரின் காலம் :** கர்த்தர் ஆபிரகாமைத் தெரிந்து கொண்டு, அவனைப் பாபிலோனிலிருந்து அழைத்து, கானான் தேசத்திலே அவனை ஆசீர்வதித்து இந்த தேசத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் கொடுப்பேன் என்று வாக்களித்தார். பின்பு ஆபிரகாமின் சந்ததியார் எகிப்தில் நானூறு வருஷம் அடிமைகளாக இருந்தார்கள். கர்த்தர் மோசே என்ற தீர்க்கதரிசியின் மூலமாக அவர்களை எகிப்திலிருந்து வெளியே அழைத்துக் கொண்டு வந்து, ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணின கானான் தேசத்தை அவர்களுக்குக் கொடுத்தார். அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். அது இன்றைக்கும் பரிசுத்தபூமி என்றழைக்கப்படுகிறது.

அந்த தேசத்தில் அவர்கள் வாழ வேண்டுமென்றால், அதற்கு ஒரு பிரமாணம் இருக்கிறது. கர்த்தர் மோசேயின் மூலமாக அவர்களுக்குப் பத்துக் கற்பனைகளையும் நியாயப் பிரமாணங்களையும் கொடுத்தார். அவர்கள் அதைக் கைக்கொள்ள வேண்டும். எவ்வளவு காலம் அதைக்

கைக்கொள்கிறார்களோ அவ்வளவு காலம் அந்த தேசத்தில் நீடித்துச் செழிப்பாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கலாம். ஆனால், தேவனுடைய கற்பனைகளை விட்டு விலகினால் அந்த தேசமே அவர்களைக் கக்கிப்போடும். ஆனால் அவர்களோ காலப்போக்கில் தங்களைச் சுற்றியிருந்த அஞ்ஞானிகளைப்போல, பல தெய்வங்களை ஏற்படுத்தி, கற்பனைகளை மீறி தங்கள் இஷ்டத்தின்படி ஜீவித்தார்கள். அப்பொழுது கர்த்தர் தீர்க்கதரிசிகளைக் கொண்டு, நீங்கள் கர்த்தருடைய வார்த்தைக்குத் திரும்புங்கள் என்று எச்சரித்தார். ஆனால் அவர்கள் செவி கொடுக்காமல் தேவனை மறந்தார்கள். அதனால் அந்த தேசம் அவர்களைக் கக்கிப்போட்டது.

**லேவியராகமம் 18 : 25 - 28. ஆகையால் அதின் அக்கிரமத்தை விசாரிப்பேன்; தேசம் தன் குடிகளைக் கக்கிப்போடும். இந்த அருவருப்புகளையெல்லாம் உங்களுக்கு முன் இருந்த அந்த தேசத்தின் மனிதர் செய்ததினாலே தேசம் தீட்டாயிற்று. இப்பொழுதும் உங்களுக்கு முன் இருந்த ஜாதிகளை தேசம் கக்கிப்போட்டது போல, நீங்கள் அதைத் தீட்டுப்படுத்தும் போது அது உங்களையும் கக்கிப் போடாதபடிக்கு, நீங்கள் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொண்டு, தேசத்திலே பிறந்தவனானாலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியனானாலும் இந்த அருவருப்புகளில் ஒன்றையும் செய்யவேண்டாம்.**

தேசம் அவர்களை எப்படி கக்கிப்போட்டதென்றால், அசீரியா ராஜாவாகிய சல்மனாசார் மற்றும் பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வந்து இஸ்ரவேலையும், யூதாவையும் சிறைக்கைதிகளாகக் கொண்டு சென்றார்கள். அந்த தேசம் எழுபது வருஷமாய் பாழ்க்கடிக்கப்பட்டது. பின்பு அவர்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து ஒப்புக்கொடுக்கும்போது கர்த்தர் அவர்களைத் திரும்பிவர உதவி செய்தார். அப்பொழுது இயேசுகிறிஸ்துவின் காலமும் ஆரம்பித்துவிட்டது.

**இயேசுகிறிஸ்துவின் காலம் :** வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர்; நித்திய ஆவியாய் இருந்த கர்த்தர்; இயேசு கிறிஸ்துவாக மாம்சத்தில் தோன்றினார். மரியாளின் கர்ப்பத்தில் தனக்கென ஒரு சரீரத்தை சிருஷ்டித்துக்கொண்டு உலகத்தில் வந்தார். அவர் இனச் சேர்க்கையின் மூலம் பிறக்கவில்லை. அவருடைய சரீரம் தேவனால் உண்டாக்கப்பட்டது. தேவன் இயேசு என்னும் சரீரத்தில் வாசமாயிருந்து இந்த உலகத்துக்குத் தம்மை வெளிப்படுத்தினார். முதலில் தம்மை இஸ்ரவேல் ஜனங்களுக்கு வெளிப்படுத்தி, பின்பு யூதேயா, சமாரியா, கலிலேயாவில் வாழ்ந்த மக்களுக்குத் தம்முடைய வார்த்தையைப் போதித்து நன்மை செய்கிறவராகவே இருந்தார். அவரது ஊழியமானது அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதியாக்கப்பட்டு, அவர்தான் மேசியா என்று நிருபிக்கப்பட்டது.

ஆனாலும் யூத ஜனங்கள் அவரைப் பின்பற்றவில்லை. அப்படி பின்பற்றியிருந்தால் அப்போதே ஆயிரம் வருட அரசாட்சி வந்திருக்கும். அவரைப் புறக்கணித்தபடியால் கர்த்தர் அவர்களை உலகின் எண்பது நாடுகளில் சிதறடித்தார். 1900 வருஷங்களாய் இஸ்ரவேல் நாடே இல்லாமல் அதைப் பலவிதமான மக்கள் சுதந்தரித்துக் கொண்டார்கள். அவர்கள் மாம்சத்தில் வந்த கர்த்தரைப் புறக்கணித்தபடியால் தேசம் அவர்களைக் கக்கிப்போட்டது.

**மீட்பின் திட்டம் :** பாவத்தினால் மனிதன் ஏதேனை விட்டுத் துரத்தப்பட்டான்; அவனை மீட்க தேவன் தமது மீட்பின் திட்டத்தை வெளிப்படுத்தினார். தேவனுடைய சிருஷ்டிப்பைப் பார்க்கிலும் அவருடைய மீட்பின் திட்டம் பெரியதாய் இருக்கிறது. எனவே, நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். நமக்காகக் கல்வாரியில் இரட்சிப்பைச் சம்பாதித்தார். இயேசு கிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்து மேலே எடுத்துக்கொள்ளப்பட்டு ஐம்பதாவது நாளிலே பரிசுத்தாவியால் தம்முடைய சீஷர்களை நிரப்பினார். அது முதற்கொண்டு ஏழு சபைக்காலங்கள் உருவானது. இந்த இரண்டாயிரம் வருஷமாக கர்த்தர் தம்முடைய சபையை ஸ்தாபிப்பதற்காக ஒவ்வொரு காலத்துக்கும் ஒரு தூதனைத் தெரிந்து கொண்டார்.

**வெளிப்படுத்தல் 1 : 20. என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபையின் தூதர்களாம்; நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்.**

**ஏழு சபைக்காலங்களும், அதன் தூதர்களும் :** எபேசு - **பவுல்,** (கி.பி. 53-170) சிமிர்னா - **இரேனியஸ்,** (170-312) பெர்கமு **- மார்டின், (**313 - 606) தியத்தீரா - **கொலம்பா,**(606-1520) சர்தை - **லூத்தர்,** (1520 - 1750) பிலதெல்பியா - **வெஸ்லி,** (1750-1906) லவோதிக்கேயா - **பிரன்ஹாம்** (1906 முதல் எடுத்துக்கொள்ளப்படுதல் வரை) **.**

இந்த ஏழு சபைக்காலத்தின் தூதர்கள் மூலம் கொடுக்கப்பட்ட செய்தியை விசுவாசித்தவர்கள் இருந்ததினால் இந்த உலகம் அழியவில்லை.

**கடைசிகாலம் :**

**மூன்று உலகமகா யுத்தங்கள் :** நாம் இப்பொழுது **லவோதிக்கேயா சபையின்** காலத்தில் இருக்கிறோம். இந்த உலகத்திற்கு மூன்று மகா யுத்தங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

**வெளி : 8 : 13. பின்பு, ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்து வரக்கண்டேன்; அவன் மகாசத்தமிட்டு; இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காள சத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ (ஆபத்துவரும்) என்று சொல்லக்கேட்டேன்.**

**முதலாம் உலகப்போர் :** முதலாம் உலகப்போர் 1914 ஆம் ஆண்டு முதல் 1918 ஆம் ஆண்டுவரை நடைபெற்றது. 1918 ஆம் ஆண்டு, 11 ஆம் மாதம், 11 ஆம் நாள் காலை 11 மணிக்கு யுத்தம் திடீரென்று முடிவுற்றது. அந்தயுத்தம் முடிவுக்கு வரவில்லையென்றால், அப்பொழுதே உலகம் முழுவதும் அழியும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

**இரண்டாம் உலகப்போர் :** இரண்டாம் உலகப்போர் 1939 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. சுமார் 6 கோடி மக்களுக்குமேல் உயிரிழந்தனர். அமெரிக்காவும் இங்கிலாந்தும் சேர்ந்து

1945-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ஆம் தேதியில் ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா மீதும், 9-ஆம் தேதியில் நாகசாகியின் மீதும் அணுகுண்டைப் போட்டனர். இதனால் யுத்தம் முடிவுக்கு வந்தது. அந்த யுத்தம் முடிவுக்கு வரவில்லையென்றால், அப்பொழுதே உலகம் முற்றிலும் அழியவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்பு விவசாய உலகமானது தொழிற்சாலை உலகமாக மாறிவிட்டது. மேலும் விஞ்ஞானிகள் உணவுபொருட்களிலும் எல்லா ஜீவராசிகளிலும் மரபணுமாற்றங்களைக் கொண்டுவந்து அனைத்தையும் கலப்படமாக்கி விட்டனர். உலகில் தங்கள் சுயநலத்துக்காக இயற்கை வளங்களை அழிக்கும்போது புவி வெப்பமயமாதல், சுனாமி, புயல், வெள்ளம் இன்னும் பல இயற்கை சீற்றங்கள் ஏற்படுகிறது. மனித ஆதிக்கத்தினால் பிளாஸ்டிக் உற்பத்தி மற்றும் அதன் கழிவினாலும் அணுஉலைக்கழிவினாலும் இரசாயனக்கழிவினாலும் சமுத்திரம், ஆறுகள், நதிகள், நீரூற்றுகள் கெட்டுப்போயிற்று. நாம் பயன்படுத்தும் வாகனம், குளிர்ச்சாதனப்பெட்டி மூலம் வரும் வாயுக்கள் ஓசோன் படலத்தை ஓட்டைப்போட்டு வாயுமண்டலத்தையே பாதித்திருக்கிறது. எனவே சுத்தமான காற்று, தண்ணீர் நமக்குக் கிடைக்கவில்லை. நீரூற்றுகள் கெட்டு அதிலுள்ள ஜீவராசிகள் அழிந்து கொண்டு வருகிறது.

தற்போது தகவல்தொடர்பு, கணினி மற்றும் இணையதள உலகமாக மாறிவிட்டது. இப்பொழுது கணினி மற்றும் இணையதளம் இல்லாமல் உலகமே இயங்காது. உலகமானது சமூகத்தகவல் (Social Media) சாதனங்கள் மூலம் அதிகமாகச் சீர்கெட்டுப் போய்விட்டது. ஜனங்கள் பொல்லாதவர்களாயும், கொடூரப் பாவிகளுமாக மாறிவிட்டார்கள். பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு இல்லை. உலகமானது அசுத்தமான காரியங்களினாலும் காம விகாரங்களினாலும் நிரப்பப்பட்டிருக்கிறது. மேலும் ஜனங்கள் பலவிதமான கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டு குணமாக்க முடியாமல் இருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் போராட்டம், வன்முறை, மதக்கலவரங்கள், நாட்டிற்கு விரோதமாக நாடு, என பூமி கொடுமையினால் நிறைந்து சமாதானம் இல்லாமல் இருக்கிறது.

**மூன்றாம் உலகப்போர் :** இப்பொழுது நாம் வாழுகிற இந்த உலகம் மூன்றாம் உலக யுத்தத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. (வெளி 16:14-16) இந்த யுத்தத்தில் நிச்சயமாக இந்த உலகம் முற்றிலும் அழிந்துபோகும். இன்றைக்கு உலகத்தின் பலநாடுகள் அணுஆயுதங்களை உடையவைகளாக விளங்குகிறது. ஏதேனும் ஒரு நாட்டின் அதிபர் முதலில் விசையை (Button) அழுத்தினால், எதிர்நாட்டு அதிபரும் விசையை அழுத்துவார். இப்படியே எல்லோரும் விசையை அழுத்தும்போது அணுஆயுதங்களினால் உலகமே அழிந்துபோகும். இதிலிருந்து நம்மைப் பாதுகாக்க, தப்பித்துக்கொள்ள கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒரு வழியை வைத்திருக்கிறார். அந்த வழி தேவனுடைய வார்த்தையாய் இருக்கிறது.

**எபிரெயர் 11:3. விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப் படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.**

எனவே, நாம் காண்கிற இந்தப் பூமியைக் கர்த்தர் உண்டுபண்ணினார். அவருடைய வார்த்தையினாலே இது உண்டானது என்று விசுவாசிக்க வேண்டும். அந்த வார்த்தை கிறிஸ்துவாக இருக்கிறது.

**1 யோவான் 1:1. ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டது மாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்.**

அந்த வார்த்தையினாலேதான் இந்தப் பூமி நிலைத்திருக்கிறது. அதே வார்த்தையினாலேதான் இந்தப் பூமி அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டுள்ளது.

**மல்கியா 4 : 1, 2, இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**

**ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்.**

உலகத்தை தேவன் தம்முடைய வார்த்தையினாலே உண்டாக்கினார் (எபி 11:3) அதற்காகவே மீட்பின் திட்டத்தைக் கொண்டு வந்து, ஆதாம் இழந்த எல்லாவற்றையும் கல்வாரியின் மூலம் மீட்டுக்கொண்டு, அந்த மீட்பின் ஆசீர்வாதங்களை நாம் சுதந்தரித்துக்கொள்ள இந்தக் கடைசி காலத்தில் வைத்திருக்கிறார். அந்த மீட்பின் ஆசீர்வாதம் தான் வரப்போகிற அழிவிலிருந்து நம்மைத் தப்புவிக்கும். அந்த மீட்பின் ஆசீர்வாதம் இந்த நேரத்திற்குரிய செய்தியாக இருக்கிறது. இந்த நேரத்திற்குரிய செய்தியை தேவன் ஏழாம் சபையின் தூதனாகிய சகோ. பிரன்ஹாமுக்கு முழுமையாக வெளிப்படுத்தினார்.

**வெளிப்படுத்தல் : 10 : 6. இனிகாலம் செல்லாது; ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும்.**

ஏழாம் தூதனுடைய செய்தி உலகமெங்கும் செல்கிறது. அது நமக்குப் பரிபூரண ஆவியைக் கொடுக்கிறது. இந்தச் செய்தியை விசுவாசிக்கிறவர்கள் உலகத்தின் பல பாகங்களில் இருப்பதினால்தான் உலகமானது அழியாமல் இருக்கிறது.

**வெளிப்படுத்தல் 22:16. சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்று இயேசு கிறிஸ்து சொல்லுகிறார்.**

இந்தக் கடைசி காலத்தில் **வில்லியம் மரியன் பிரன்ஹாம்** என்ற தம்முடைய தூதனை அனுப்பினார். இவர் ஒரு தீர்க்கதரிசி. இவருடைய செய்தி ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை தேவரகசியத்தை வெளிப்படுத்துகிறது.

இந்த உலகம் அழிவது நிச்சயம். வரப்போகும் உலக அழிவிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்றால், அதற்கு ஒரேவழி ஏழாம்தூதனின் செய்தியை விசுவாசித்து ஏற்றுக்கொள்வதுதான். இந்தச் செய்தியை விசுவாசிப்பவர்கள் இருப்பதால்தான் உலகம் அழியவில்லை. ஏனென்றால் தேவன் அவர்களோடு இருக்கிறார். எடுத்துக்கொள்ளப்படும் நேரம் வரும்போது கண்ணிமை நேரத்தில் இந்தச் செய்தியை விசுவாசிக்கிறவர்கள் அவரோடு ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

**வெளிப்படுத்தல் 22:17. ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக் கடவன்.**

தற்பொழுது தீர்க்கதரிசியைக் கர்த்தர் எடுத்துக்கொண்டாலும் அந்தத் தீர்க்கதரிசியையும் அவர் மூலமாய் கொடுக்கப்பட்ட செய்தியையும் விசுவாசிக்கிறவர்கள் சபையாகிய மணவாட்டியாய் இருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறார்கள். அவர்களுடைய சத்தமும் இணையதளத்தின் (Internet) மூலமாக எல்லா இடங்களுக்கும் செல்கிறது. விருப்பமுள்ளவர்கள் ஜீவத்தண்ணீரான வெளிப்பாடுகளை இலவசமாய் பெற்றுக் கொள்ளலாம். தேவப்பிள்ளையாகமாறி ஏழாம்தூதனின் சத்தத்துக்கும் மணவாட்டியின் சத்தத்துக்கும் கீழ்படியும்போது வரப்போகிற உலக அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

யோவான் ஆறாம் அதிகாரத்தில், தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று இயேசு கிறிஸ்துவிடம் கேட்கும்போது, அவர் அனுப்பினவரை விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்று கூறுகின்றார்.

ஆகவே தேவன் அனுப்பின மனுஷனையும், அவருடைய செய்தியையும் விசுவாசிக்கும்போது தேவன் நம்மைப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்வார்.

**1 தெசலோனிக்கேயர் 4 : 16, 17. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.**

மணவாட்டி எடுத்துக்கொள்ளப்பட்டபின் இந்த உலகமானது உபத்திரவக் காலத்தில் தள்ளப்படும். அதன் பின்பு உலகம் அர்மகெதோன் யுத்தத்தில் அழியும்.

**உபத்திரவக்காலம் :** உலகின் 80 நாடுகளில் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள் இப்போது தங்கள் சொந்ததேசத்தில் வந்து குடியேறியிருக்கிறார்கள். இவர்களில் தேவனால் முன்குறிக்கப்பட்ட ஆத்துமாக்களுக்கு, நாம் விசுவாசிக்கிற இந்தச்செய்தி போகும். அவர்களில் 144000 பேர் உபத்திரவக் காலத்தில் மீட்கப்படுவார்கள்.

**வெளிப்படுத்தல் 7:4. முத்திரை போடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக் கேட்டேன்; இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்.**

அவர்கள் அந்தச்செய்தியை விசுவாசித்து, அந்தச்செய்திக்காக ஜீவிக்கும்போது அந்திகிறிஸ்து அவர்களை உபத்திரவப்படுத்துவான். அப்பொழுது இரத்தசாட்சிகளாக மரிப்பார்கள். அதன் பின்பு தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கிறவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள். வெளிப்படுத்தல் 6ஆம் அதிகாரம் 12 முதல் 17 ஆம் வசனம் வரையும் சொல்லப்பட்டபடி, வார்த்தையின்படி ஜீவிக்காதவர்களுக்கு எந்த மறைவிடமும் இருக்காது. அவர்கள் அக்கினிக்கடலில் தான் பங்கடைவார்கள்.

எனவே, இந்தக்கடைசி காலத்திற்கென்று கொடுக்கப்பட்ட வார்த்தையை விசுவாசிப்பதே தப்பித்துக்கொள்ள ஒரே வழி. அப்படி விசுவாசிக்கிற ஒரு சிறு கூட்டம் உலகில் இருக்கிறது. வரப்போகிற அழிவைத் தடுக்க எந்த விஞ்ஞானியாலும், ஐக்கிய நாட்டுச் சபையாலும், பூமியின் ராஜாக்களாலும் முடியாது. உலகம் மெல்லமெல்ல அழிந்து ஒரு நாளிலே அது முற்றிலுமாக அழியும். இந்த வானமும் இந்தப் பூமியும் அழிந்துபோகும். புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும்.

**புதிய வானம், புதிய பூமி :**

**வெளிப்படுத்தல் 21 : 1, 2. பின்பு, நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக் கண்டேன்.**

புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும்போது மேலே எடுத்துக்கொள்ளப்பட்ட கர்த்தருடைய பரிசுத்தவான்கள் இயேசுவோடு இந்த உலகத்தை ஆளுவார்கள். கர்த்தர் இந்த உலகத்தை ஏதேனைப்போல மாற்றுவார். இந்த உலகத்திற்கு மீட்பு உண்டு. மீட்கப்பட்டவர்கள் அதிலே வாசம் பண்ணுவார்கள்.

இந்தக் கடைசிகால செய்தியாகிய இந்த வார்த்தைக்குச் செவிகொடுத்து ஒப்புக்கொடுத்தால் மட்டுமே இந்த அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும். எனவே, இந்தச் செய்தியைப் படிக்கிற நீங்கள் கர்த்தருடைய வார்த்தைக்குச் செவி கொடுத்தால் உங்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**................ஆமென்........................**

மேலும் விவரங்களுக்கு
போதகர். A. சாமுவேல்,
கல்வாரி கூடாரம்,
எண். 8, கலைஞர் தெரு,
வளசரவாக்கம், சென்னை - 600 087.
கைபேசி எண் : 9884720958
website : www.calvarytabernacle.in
www.calvarytabernaclemessage.in

## அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ள;

நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது. அப் : 2:38-39


# கல்வாரி கூடாரம்

8, கலைஞர் தெரு, வளசரவாக்கம்,

சென்னை 600 087

Phone : +91 9884720958

websites : www.calvarytabernacle.in

www.calvarytabernaclemessage.in


Private Circulation Only